# நடத்தைவாதம்: அரசியல் விஞ்ஞான ஆய்வில் புதிய மரபின் எழுச்சியும் வீழ்ச்சியும்

எம்.ஏ.எம்.பௌசர்
விரிவுரையாளர்,அரசியல் விஞ்ஞானத் துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
Fowsarma2009@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

அரசியல்சார் கல்வித் துறையினை விஞ்ஞான ரீதியானதாக மாற்றுவதற்கான முயற்சிகள் தற்கால அரசியல் சிந்தனையாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அம்முயற்சிகளின் வெளிப்பாடாக நடத்தைவாதம் தோற்றம் பெற்றது. ஒரு இயக்கமாக் புரட்சியாக் அணுகுமுறையாக் கோட்பாடாக அடையாளப்படுத்தப்படும் இந்நடத்தைவாத மரபு இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னரே பிரபல்யமடைந்தது. பின்நாட்களில் இம்மரபில் ஏற்பட்ட வளர்ச்சிகள் அதுசார்ந்த புதிய சீர்திருத்தப் பகுதியொன்று உருவாக வழிவகுத்தது. இச்சீர்திருத்தப் பகுதி பின்வந்த நடத்தைவாதம் என அழைக்கப்படுகின்றது. இப்புதிய மரபு பழைய மரபினை கடுமையாகச் சாடியதுடன் அரசியல் விஞ்ஞானத்தில் புதிய கோட்பாட்டுத் தளங்கள் உருவாகவும் வழிவிட்டது. இவ்விரு நடத்தைவாத மரபுகளும் தமக்கிடையே தெளிவான வேறுபாடுகளை வெளிப்படுத்தி நின்றதுடன் அரசியல் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு தொடர்தேர்ச்சியான பங்களிப்பினை வழங்கிவருகின்றன. இப்பின்புலத்தில் இக்கட்டுரை நடத்தைவாதம், பின்வந்த நடத்தைவாதம் ஆகிய இரு கோட்பாட்டு மரபுகளை பரிசீலித்து அவ்விரு மரபுகளும் அரசியல் விஞ்ஞானக் கல்விக்கு வழங்கிய பங்களிப்பினை மதிப்பீடு செய்கின்றது. இக்கட்டுரைக்கான தரவுகள் புலமைசார் இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டுள்ளதுடன் பகுப்பாய்வும் முடிவுகளும் விபரிப்புமுறையில் தரப்பட்டுள்ளன.

பிரதான சொற்கள்*:* அரசியல் விஞ்ஞானம், நடத்தைவாதம், பின்வந்த நடத்தைவாதம்

## 1. அறிமுகம்

நீண்டகாலமாக அரசியல்சார் ஆய்வின் அடிப்படைகளாக விளங்கிய அரசு, அரசாங்கம், அரசியல் நிறுவனம் போன்ற அம்சங்களில் மட்டுமல்லாமல் அரசியலில் பங்குகொள்கின்ற மனிதர்களுடைய நடத்தைகள் பற்றியும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தின் விளைவாகத் தோற்றம் பெற்றதே நடத்தைவாதமாகும். இம்மரபு இருபதாம் நூற்றாண்டில் அரசியல் விஞ்ஞானத்தில் இடம்பெற்ற மிக முக்கியமான வளர்ச்சியாக அடையாளப்படுத்தப்படுவதுடன் உயிரியல் ஆய்வு முறையியலிருந்து சமூக விஞ்ஞானத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டதுமாகும்.

பிற்பட்ட காலத்தில் நடத்தைவாதத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளும் விமர்சனங்களும் புதிய ஆய்வு நுட்ப முறைகளை அறிமுகம் செய்ததுடன் அரசியல் விஞ்ஞான ஆய்வுப் பரப்பினையும் விஸ்தரித்தது. நடத்தைவாதத்தில் ஏற்பட்ட முறையியல் சார் இவ்வளர்ச்சியினை பின்வந்த நடத்தைவாதம் என அழைப்பர். இவ்விரு ஆய்வு முறைகளும் தெளிவான வேறுபாட்டு அம்சங்களைக் கொண்டுள்ள போதிலும் அரசியல் விஞ்ஞான கல்வி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளன.

## **2.** நடத்தைவாதம் **(Behavioralism)**

நடத்தைவாதம் என்ற சொல் முதலாம் உலக மகா யுத்தகாலத்தில் பரவலாகப் பேசப்பட்ட போதிலும் அமெரிக்க ஊடகவியலாளரானFrank Kentஎன்பவரே 1928இல் இச்சொல்லினை முதன் முதலாகப் பயன்படுத்தினார். இதன்படிKent'அரசியல் நடத்தை (Political Behavior)'என்ற பெயரில் ஒரு புத்தகத்தினை எழுதி அதன் மூலம் 'நடத்தைவாதம்' எனும் சொல்லினை அறிமுகம் செய்தார். இவரையடுத்து Herbert Tingstonஎன்பவரும் தனது எழுத்துக்களில் அரசியல் நடத்தை என்ற பதத்தினைப் பயன்படுத்தலானார்.Tingston 1937இல் 'தேர்தல் புள்ளிவிபரம்சார் அரசியல் நடத்தைக் கற்கைகள் (Political Behaviour Studies in Election Statistics)'என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதினார் (Agarwal, 1999). இந் நூலின் மூலம் Tingston நடத்தைவாதச் சொல்லாடலின் முக்கியத்துவத்தினை வெளிக்கொண்டு வந்தார்.

எனினும் 1908ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிரஹம் வொலஸ் மற்றும் ஆர்தர் எ.ஃப். பென்ட்லி ஆகியோர் அரசியலின் உண்மையான தோற்றப்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.வொலஸ் தனிமனிதர்களின் உளவியல் பற்றிய கற்கை இன்றி அரசியல் கற்கையானது பொருளற்றது என வாதிட்டதுடன் தனிமனிதர்களின் நடத்தை எல்லா அரசியல் தோற்றப்பாடுகளிலும் முக்கியமான பங்கினை வகிக்கின்றது என்பதனை எடுத்துக்காட்டினார். அதேவேளை பென்ட்லி குழுக்களின் வகிபாகம் பற்றிய வாதங்களை முன்வைத்து தனிமனிதர்களின் நடத்தை பற்றிய கற்கையின் அவசியத்தினை வெளிக்கொண்டு வந்தார். 1921இல் சார்ல்ஸ் ஈ. மெரியம் அரசியல்

கற்கையானது விஞ்ஞான ரீதியானதாக இருக்க வேண்டும் எனக் கூறினார். ஜோர்ஜ் கட்லீன் அளவு ரீதியான உருவாக்கம், வகைப்படுத்தல் மற்றும் அவதானத்திற்கான மிகவும் நுணுக்கமான நுட்பங்களின் விருத்தி மற்றும் பயன்பாட்டிற்காக குரல்கொடுத்தார் (Agarwal, 1999). இவ்வாறாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்து அரசியல் விஞ்ஞான ஆய்வில் ஒரு புதிய மரபினை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அடிப்படையில் நடத்தைவாதம் ஒரு இயக்கமாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதனை ரொபர்ட் ஏ. டால் என்பவரின் வார்த்தையில் கூறுவதனால் நடத்தைவாதம் என்பது "அரசியல் அரங்கினுள் உருவான ஒரு எதிர்ப்பியக்கமாகும்" (Manivasagar,1996). எனினும் அதுவொரு ஆய்வு முறையோ அணுகுமுறையோ அல்ல எனக் கூறுவோரும் உண்டு. இவ் எதிர்ப்பியக்கம் தொடர்பாக எழுந்த விவாதங்களும் கருத்துரைகளும் அரசியல் கோட்பாடுகளில் ஒரு பிரிவாக நடத்தைவாதம் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு வழிவிட்டது. இவ்விணைவிற்குப் பங்களிப்புச் செய்தவர்களுள் சார்ல்ஸ் ஈ. மெரியம், ரொபர்ட் ஏ. டால், ஹரோல்ட் லாஸ்வெல், டேவிட் ரூமன், வூட்ரோ வில்சன், ஜேம்ஸ் பிறைஸ், மெக்ஸ் வெபர், ஆதர் எ.ஃப். பென்ட்லி, கிரஹம் வொலஸ், டேவிட் ஈஸ்டன், ஹேர்பர்ட் சைமன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர் (Agarwal, 1999). இவர்களுள் சார்ல்ஸ் ஈ. மெரியம் நடத்தைவாதத்துடன் இணைந்த அரசியல் விஞ்ஞானத்தின் புலமைசார் தந்தையாக வர்ணிக்கப்படுகின்றார். இவர் அமெரிக்க அரசியல் விஞ்ஞான சங்கத்தின் தலைவராக இருந்து அரசியல் விஞ்ஞானத்தில் புதிய மரபினை உருவாக்கப் பங்களிப்புச் செய்ததுடன் ஐக்கிய அமெரிக்காவில் அரசியல் விஞ்ஞானத்திற்கான தனியான துறையினை விருத்தி செய்வதிலும் முக்கிய பங்காற்றினார் (Manivasagar,1996).

மேற்குறிப்பிட்ட புலமைசார் ஆய்வாளர்கள் அரசியல் விஞ்ஞானத்தினை முறைப்படியமைந்தஒரு கற்கையாகவும் அதிகளவு விஞ்ஞானத் தன்மைமிக்கதாகவும் மாற்றுவதற்கு முயற்சிகளை எடுத்ததுடன் ஒப்பீட்டு அரசாங்கம் பற்றிய கற்கையில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். அதேவேளை உள்ளூராட்சி அரசாங்கம், சர்வதேச உறவுகள், அரசியலமைப்புச் சட்டம், பொதுத்துறை நிர்வாகம் போன்ற அரசியல் விஞ்ஞானக் கற்கைப் பிரிவுகளை மரபுரீதியான அணுகுமுறைகளிலிருந்து விடுபட்டு நடத்தைவாத நுட்பங்களின் ஊடாக ஆய்வு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

சொற்பத அடிப்படையில் நடத்தைவாத மரபானது வரலாற்று, சட்ட மற்றும் ஏனைய முறைகளிலிருந்து வேறுபட்டதும் நோக்காட்சி வாதத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டதுமாகும். இம்மரபானது விதிகளின் பிரச்சினை பற்றியே கூடுதல் கவனம் செலுத்துகின்றது. உறுதியான அடிப்படைகள், கட்டமைப்புக்கள், மனித இயல்பு மற்றும் நடத்தையுடன் தொடர்பான நிகழ்வுகள் என்பவற்றினை விட தனிமனிதர்களினதும் குழுக்களினதும் நடத்தைகளைக் கற்பதிலேயே அது அதிக அழுத்தம் கொடுக்கின்றது. மேலும் நடத்தைவாதம் உளவியல் மற்றும் சமூகவியல் மாறிகளில் கூடிய கவனம் செலுத்துவதுடன் எதிர்கால ஆய்வினை முன்னேற்றுவதற்கான வழியினையும் திறந்து விட்டுள்ளது. நடத்தைவாதிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் பெறுமானங்கள் மற்றும் ஊகங்களின் நம்பிக்கை கொள்ளவில்லை. மாற்றமாக பெறுமானங்கள் மற்றும் ஊகங்களில் நம்பிக்கை கொண்டுள்ள மரபுவாதிகளை அவர்கள் மிகக் கடுமையாக விமர்சிக்கின்றனர் (Manivasagar,1996).

இத்தகையதொரு நடத்தைவாத இயக்கம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவிலேயே பிரபல்யமடைந்தது. குறிப்பாக சிந்தனாரீதியான இவ்வியக்கம் துறையிடைசார் அணுகுமுறையில் அழுத்தம் கொடுத்ததுடன் மரபுரீதியான அரசியல் அணுகுமுறையில் நம்பிக்கை இழந்த ஒரு தொகுதி புலமையாளர்களையும் உள்ளடக்கியிருந்தது. இச்சிந்தனைப் பிரிவினர் தத்துவார்த்த, நிறுவன, வராலாற்று அணுகுமுறைகள் தொடர்பில் முற்றுமுழுதாகத் திருப்தியுற்றிருந்தனர். இதனால் நடத்தைவாதம் சாதாரண எதிர்ப்பியக்கமாக அன்றி ஒரு பெரும் புரட்சி இயக்கமாக அரசியல் விஞ்ஞானத்தில் உருவெடுத்தது (Manivasagar,1996).

நடத்தைவாதத்தின்படி அரசியல் முறைமை என்பது 'செயற்பாடுகளின் நடத்தை முறைமை' எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.பண்புரீதியான மற்றும் புள்ளிவிபரவியல் ரீதியான தரவுகள் உட்பட வினாக்கொத்து மற்றும் ஏனைய விஞ்ஞான முறைகளையும் நடத்தைவாதம் தமது ஆய்விற்கு பயன்படுத்த முனைந்தது. இதன்படி நடத்தைவாதிகள் மனித நடத்தையின் உண்மை நிலை பற்றிய ஆய்வில் கவனம் செலுத்தினர். இதன் மூலம் மனித நடத்தைகளின் அடிப்படையான அம்சங்களையும் அவர்கள் அடையாளப்படுத்தினர். அவை தலைமைத்துவம், அரசியல் குழுக்கள், பொதுஜன அபிப்பிராயம், பிரதிநிதித்துவம், கட்சி ஒழுங்கமைப்பு என்பனவாகும் (Johari, 1989).

எனினும் நடத்தைவாதிகள் எதிர்கொண்ட முக்கிய பிரச்சினை 'வேண்டும்(OUGHT)'என்ற

சொல்லினை 'இருப்பது (IS)' என்ற சொல்லினால் மாற்றியமைப்பது பற்றியதாக இருந்தது. இம் மாறுதல் கூட நடைமுறைசார் முறையியலைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும் என அவர்கள் வாதிட்டனர். இங்கு 'வேண்டும்' என்பது பெறுமானங்களின் (இலட்சியத்தின்) முக்கியத்துவத்தினையும் 'இருப்பது' என்பது யதார்த்தத்தின் முக்கியத்துவத்தினையும் குறிப்பதாக அவர்கள் கருதினர் (Agarwal, 1999).

இதனால் பெறுமானங்களை யதார்த்தங்களால் மாற்றுவது நடத்தைவாதிகளினது முக்கிய கவனமாக இருந்தது. இம்மாறுதல் செயன்முறையுடன் தொடர்புபட்டவகையில் Bone மற்றும் Ranney ஆகியோர் வாக்களிப்பு நடத்தையில் ஒழுங்கமைப்பு ரீதியான செயற்பாடுகள், ஒழுங்கமைப்புக்குப் பங்களிப்புச் செய்பவர்கள், அபிப்பிராயம் தெரிவிக்கும் தலைவர்கள், வாக்காளர்கள், வாக்காளர் அல்லாதோர் மற்றும் அரசியல் ஆர்வமற்றோர் என ஆறு பகுதியினரைக் கருத்திற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர் (Rathod, 2004).

இந்தவகையில் அரசியல் விஞ்ஞான வளர்ச்சிப் போக்கில் புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்திய ஒரு புதிய மரபாக நடத்தைவாதத்தினைப் பார்க்க முடியும். டேவிட் பீ. ரூமனின் பார்வையில் இம்மரபு குறிப்பிட்ட ஆய்வு முறையுடன் கூடியதும் பரிசோதனைசார் முறைகளுக்கு முதன்மையான அழுத்தம் தருவதுமாகும்.

3. நடத்தைவாதத்தின் பண்புகள்

அரசியல் விஞ்ஞான ஆய்வில் புதியதொரு மரபு என்றவகையில் நடத்தைவாதமானது அதற்கே உரித்தான சில தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளது. அத்தகைய எட்டு பண்புகளைடேவிட் ஈஸ்டன் குறிப்பிட்டுள்ளார். இவ் எட்டுப் பண்புகளையும் 'அரசியல் நடத்தைவாதத்தின் புலமைசார் தத்துவங்கள்' என அழைப்பர். அவையாவன (Agarwal, 1999):

1. ஒழுங்குபாடுகள் (Regularities): அரசியல் நடத்தையில் குறிப்பிடத்தக்க ஒருமைப்பாடின்மைகள் உள்ளபோதிலும் முறைப்படியமைந்த கோட்பாடொன்றின் மூலம் மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்தி பொதுமைப்படுத்த முடியும்.
2. மெய்ப்பித்தல் (Verification): மெய்ப்பிக்கப்பட முடியாத எந்தவொன்றும் விஞ்ஞானமாக இருக்க முடியாது. எனவேதான் ஒவ்வொன்றும் பரிசோதிக்கப்பட்டு மெய்ப்பிக்கப்பட வேண்டும்.
3. நுட்பங்கள் (Techniques): விஞ்ஞான ரீதியான தரவுகளைப் பெறுவதற்கும் அவற்றினை விபரிப்பதற்கும் சரியான நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
4. எண்கணிதவாதம் (Quantification): ஆராய்ச்சிக்கு அளவுசார் தரவுகளைச் சேகரித்தல் அவசியமானது. அவ்வாறு சேகரிக்கப்படும் புள்ளிவிபரங்களின் சரிபார்த்தலை முறையாகச் செய்ய அவற்றை அளவிட்டறிதல் வேண்டும்.
5. பெறுமானங்கள் (Values): விஞ்ஞான ரீதியான சோதனைகள் பொருள் சார்ந்ததாகையால் அவை ஒழுக்க மற்றும் நடைமுறைப் பெறுமானங்களிலிருந்து விடுபட்டதாக இருக்க வேண்டும்.
6. முறைமைப்படுத்தல் (Systematization): அரசியல் விஞ்ஞான ஆய்வுகள் கோட்பாட்டுப் படிமுறையிலமைந்ததாக இருக்க வேண்டும்.
7. தூய விஞ்ஞானம் (Pure Science): அரசியல் விஞ்ஞான ஆய்வுகள் எதுவாயினும் அவை தூய விஞ்ஞான அணுகுமுறையில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
8. ஒருமைப்பாடு (Integration): அரசியல் மற்றும் சமூகத் தோற்றப்பாடுகளை தனிமைப்படுத்தி ஆராய்சிக்குட்படுத்த முடியாததனால் துறையிடைசார் அணுகுமுறையினைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான ஈ. கோ்பட்ரிக் நடத்தைவாதத்தில் பின்வரும் நான்கு பிரதான குணாம்சங்கள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றார் (Johari, 1989):

1. அரசியல் நிறுவனங்களை அடிப்படை எண்ணக்கரு அலகாகவும் தனிநபர் மற்றும் குழு நடத்தைக்கு பதிலீடாகவும் நோக்கப்படுதலை நிராகரித்தல்.
2. சமூக விஞ்ஞானத் துறைகளுக்கிடையிலான ஒருங்கிசைவுத் (துறையிடைசார்) தன்மையினை வலியுறுத்துதல்.
3. நுட்பம் சார்ந்த அளவீடு மற்றும் எண்கணித ரீதியிலான ஆய்வு முறைகளில் அதிக கவனம் செலுத்துதல்.
4. முறைசார்ந்த பரிசோதனைவாதம் தழுவிய கோட்பாட்டு அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டிருத்தல்.

4.பின்வந்த நடத்தைவாதம் **(Post-Behavioralism)**

நடத்தைவாத மரபு நடைமுறைக்கு வந்ததன் பின்னர் அதன் மீது பல்வேறு விமர்சனங்கள் தொடுக்கப்பட்டன. இதனையடுத்து நடத்தைவாதத்தின் சீர்திருத்தப் பகுதியொன்று தோற்றம் பெறவந்தது. அதுவே பின்வந்த நடத்தைவாதம்(Post–Behavioralism) ஆகும். நடத்தைவாதத்தினுள் எழுந்த இச்சீர்திருத்த

இயக்கத்திற்கு ஆதரவளித்த புலமையாளர்கள் அரசியலை ஒரு தீவிரமான அறிவியல் பாடமாக மாற்றுவதற்கு நடத்தைவாதிகள் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டித்தனர். இதன் மூலம் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடத்தையியல்சார் ஆராய்ச்சிகள் விமர்சனங்களுக்குள்ளானதுடன் ஏற்கனவே நடத்தைவாத ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த பல ஆய்வாளர்கள் தமது ஆராய்ச்சிகள் பொருத்தமற்றது எனக் கண்டனர். இதனால் இவ்வாய்வாளர்கள் நடத்தைவாதத்திற்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தனர். இவர்களுள் டேவிட் ஈஸ்டன் குறிப்பிடத்தக்கவராவார். இவர் ஒரு கால கட்டத்தில் நடத்தைவாதப் புரட்சிக்கு தீவிரமாக குரல்கொடுத்த போதிலும் பின்நாட்களில் நடத்தைவாதத்தின் முறைமைகள் பற்றி கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார் (Mahajan, 2009). இவ்விதம் நடத்தைவாத மரபினுள் உருவான புதிய புரட்சிகர சீர்திருத்த இயக்கமாக பின்வந்த நடத்தைவாதத்தினை குறிப்பிட முடியும்.

நடத்தைவாத மரபில் புரட்சியினை ஏற்படுத்திய ஒன்றாக பின்வந்த நடத்தைவாதம் நோக்கப்படுகின்ற போதிலும் அதனை பாரம்பரியவாதத்துடன் இணைத்துக் கணிப்பிட முடியாது. அவை இரண்டும் குறிப்பிட்டுக் கூறத்தக்க தெளிவான வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இந்தவகையில் பின்வந்த நடத்தைவாதமானது ஈஸ்டனின் 'பொருத்தமான நம்பிக்கைகள்' என்ற கோட்பாட்டின் மூலம் வளர்ச்சியுற்றதாகும். இது அரசியல் விஞ்ஞானத்தினை முன்னோக்கிச் கொண்டு செல்லும் ஒன்று என்பதுடன் எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டுள்ள ஒரு கோட்பாடாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை பின்வந்த நடத்தைவாதம் பொருத்தம் மற்றும்செயல்(Relavance and Action) ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது (Manivasagar,1996).

இவ்விதம் நடத்தைவாதத்தில் புதியதொரு மரபு உருவாகுவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைAgarwal (1999) 'தனது அரசியல் கோட்பாடு' எனும் நூலில் சுட்டிக்காட்டுகின்றார்:

1. உலகியல் நடைமுறை குறித்த பிரச்சினைகளில் கவனம்செலுத்த நடத்தைவாதம் தவறியிருந்தமை.
2. நடத்தைவாதத்தினை தோற்றுவித்தவர்களே அதனை விமர்சிக்கத் தொடங்கியமை (டேவிட் ஈஸ்டன்).
3. ஆய்வு முறைகள், கருவிகள் மற்றும் நுட்பங்கள் மீது நடத்தைவாதிகள் அதிக அழுத்தம் கொடுத்தமை.
4. மனிதனை இயந்திர நோக்கில் பார்க்கும் நடத்தைவாத அணுகுமுறையின் மீது உருவான அதிருப்தி.
5. அரசியல் விஞ்ஞானத்தினை பிரச்சினைகளுக்குத் தீர்வினைத் தரும் விஞ்ஞானமாக மாற்றுவதற்கு நடத்தைவாதிகள் தவறியமை.

**5. பின்வந்த நடத்தைவாதத்தின் பண்புகள்**

நடத்தைவாத மரபின் சீர்திருத்தப் பகுதியாகத் தோற்றம் பெற்ற பின்வந்த நடத்தைவாதத்தின் பண்புகள் பின்வருனவாகும் (Manivasagar,1996):

1. பெறுமானத்திலிருந்து விடுபட்ட சமூக விஞ்ஞானத்தினை எதிர்த்தல்: பின்வந்த நடத்தைவாதிகள் அரசியல் விஞ்ஞானத்தினை பெறுமானத்திலிருந்து விடுபட்ட (value free) விஞ்ஞானமாக மாற்றுவதற்கு எடுத்த முயற்சிகளை கண்டிக்கின்றனர்.
2. எதிர்ப்பியக்கம்: நடத்தைவாதிகள் முன்வைத்துள்ள கருத்துக்களை எதிர்ப்பதன் வாயிலாக பின்வந்த நடத்தைவாதம் ஓர் எதிர்ப்பியக்கமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.
3. புலமைசார் இயக்கம்: பின்வந்த நடத்தைவாதமானது சமூகத்தின் குறிப்பிட்ட வகுப்பாக அன்றி, அது ஒரு புலமைசார் இயக்கமாகக் கருதப்படுகின்றது.
4. சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வு: பின்வந்த நடத்தைவாதம் அரசியல் விஞ்ஞானமானது சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடையதாக இருக்க வேண்டும் என்று வாதிடுவதுடன் சமூகத்தில் இருக்க வேண்டிய நீதி,சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் போன்றவற்றினை அது பிரதிபலிக்க வேண்டும் என்கின்றது.

இப்பண்புகள் தவிர்ந்த மேலும் சில பண்புகளை டேவிட் ஈஸ்டன் அடையாளப்படுத்தியுள்ளார். அவை: நுட்பமுறைகளை விட உள்ளடக்க அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், சமூக மாற்றத்தின் மீது அழுத்தம் கொடுத்தல், பௌதீக யதார்த்தத்துடன் மட்டும் தொடர்பினைக் கொண்டிராதிருத்தல், அவசியமான பெறுமானங்களுடன் தொடர்பினைப் பெற்றிருத்தல், மனித நாகரீகத்தின் பெறுமானங்களைப் பாதுகாத்தல், செயற்பாட்டில் அழுத்தம் கொடுத்தல் மற்றும் அரசியலை தொழில் ரீதியானதாக்குதல் என்பனவாகும் (Mahajan, 2009).

6. நடத்தைவாதமும் பின்வந்த நடத்தைவாதமும்

இரண்டாம் உலக மகா யுத்தத்தினைத் தொடர்ந்து அரசியல் விஞ்ஞானப் பரப்பில் பல முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. அம்மாற்றங்களுள் அரசியல் விஞ்ஞானிகளின் புதிய தலைமுறையொன்று தோற்றம் பெற்றமை

குறிப்பிடத்தக்கதாகும். இப்புதிய தலைமுறையினர் அரசியல் விஞ்ஞானத்தின் துறைசார் நோக்கம் அதிகாரப் போராட்டத்துடன் தொடர்புடைய வாழ்க்கையினை விபரிப்பதாகும் என்று கூறியதுடன் அரசாங்கம் பற்றிய ஆய்வில் சமூகவியல், உளவியல் மற்றும் பொருளாதாரக் காரணிகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்றனர். இத்தலைமுறையில் அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளே அதிகம் பேர் இருந்தனர். இவர்களுள் சார்ல்ஸ் ஈ. மெரியம் குறிப்பிடத்தக்க ஒருவர். இவர் மரபுரீதியான மதிப்பீட்டுக் கோட்பாட்டிற்கு எதிரான எதிர்ப்பியக்கத்திற்கு தலைமையேற்று புதிய தலைமுறையினரை வழிநடத்தினார் (Agarwal, 1999).

அரசியல் விஞ்ஞான வளர்ச்சிப் போக்கில் உருவான இப்புதிய தலைமுறை வளர்ச்சிக்கு அமெரிக்க அரசாங்கமும் பணரீதியான உதவிகளை வழங்கியிருந்தது. இப்புதிய தலைமுறை மனித நடத்தைகளினூடாக சமூக விஞ்ஞானங்களை ஆராய்கின்ற புதிய நுட்ப முறையினை விருத்தி செய்தது. இப் புதிய முறையானது அரசியல் விஞ்ஞானத்தில் கூடிய செல்வாக்கினைச் செலுத்தியதுடன் இங்கு பயன்படுத்தப்பட்ட மரபுசார்ந்த முறைகளையும் கேள்விக்கிடமாக்கியது. விஷேடமாக அமெரிக்காவின் சிக்காக்கோ, மிச்சிக்கன், யால ஆகிய பல்கலைக்கழகங்கள் இப்புதிய தலைமுறையினரின் வளர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பங்களிப்பினை வழங்கியிருந்தன. இப்பின்புலத்தில் உருவான அரசியல் விஞ்ஞான ஆய்வின் புதிய மரபுகளாக நடத்தைவாதத்தினையும் அதன் பின்வந்த நடத்தைவாதத்தின் சீர்திருத்தப் பகுதியினையும் நாம் அடையாளப்படுத்தலாம். குறித்த இரு மரபுகளும் பொதுவான வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டுள்ளபோதிலும் அவை இரண்டுக்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாடுகளை பின்வருமாறு காணலாம்:

டேவிட் ஈஸ்டனின் கருத்தின்படி சமூக உலகிலும், பொருளாதார பண்பாட்டுத் துறைகளிலும் ஏற்பட்ட தீவிர மாற்றங்களையும் அதன் விளைவாக உருவான புதிய பிரச்சினைகளையும் நடத்தைவாதம் உணர்ந்து கொள்ளவில்லை. மாறாக பின்வந்த நடத்தைவாதிகள் இவற்றை உணர்ந்து தெளிந்தாராயும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இதன் மூலம் நடத்தைவாதமும் பின்வந்த நடத்தைவாதமும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும் விதத்தினைப் புரிந்துகொள்ள முடியும்.

நடத்தைவாதமானது கடந்த கால பாரம்பரிய நுட்பமுறைகளை முழுமையாக மறுத்துரைக்கின்றது. ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது கடந்த கால பாரம்பரிய நுட்பங்களை மறுத்துரைப்பதற்குப் பதிலாக பொருத்தமானவகையில் அவற்றைச் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றது. இதனை டேவிட் ஈஸ்டனின் வார்த்தையில் கூறுவதாக இருந்தால் "இது ஒரு பொய்யான புரட்சி. மாறாக அது பிரதியீடானதொரு எதிர்வினையன்று. அது மாறிக் கொண்டிருக்கின்ற ஒன்று. மாறாக பாதுகாத்துப் பேணப்படும் ஒன்றன்று. அடிப்படையில் இது ஒரு சீர்திருத்த முயற்சி. எனினும் அது ஓர் எதிர் சீர்திருத்தமன்று"(Agarwal, 1999).

நடத்தைவாதமானது அரசியல் கற்கைக்கு விஞ்ஞான ஆய்வு முறையை வரவேற்பதுடன் பரிசோதனை மற்றும் நியம நோக்கினை பிரதான ஆய்வு முறைகளாகவும் பரிந்துரைக்கின்றது. ஆனால் பின்வந்த நடத்தைவாதம் அடிப்படையில் விஞ்ஞான ஆய்வு முறையை எதிர்க்கின்றது. பரிசோதனை முறை மற்றும் நியம நோக்கு என்பனவற்றையும் அது கடுமையாக விமர்சிக்கின்றது.

ஒழுங்குபாடுகள், வாய்ப்புப் பார்த்தல், எண்கணித ஆய்வு, பெறுமதிகள், நுட்பங்கள், முறைமை யாக்கல்கள் முதலியவற்றை பிரதான குணாம்சங்களாகக் கொண்டு நடத்தைவாதம் வளர்ச்சி கண்டது. ஆனால் பின்வந்த நடத்தைவாதம் மேற்குறிப்பிட்ட அம்சங்களின் குறைபாடுகளைக் களைந்து ஒரு கலப்பு முறையியலை பரிந்துரைக்கின்றது.

நடத்தைவாதமானது பெறுமானத்திலிருந்து விடுபட்ட அரசியல் விஞ்ஞானத்தினை வலியுறுத்துகின்றது. ஆனால் பின்வந்த நடத்தைவாதிகள் பெறுமானத்தில் இருந்து விடுபட்ட சமூக விஞ்ஞானத்தினை நிராகரிக்கின்றனர். அரசியல் விஞ்ஞானத்தினை பெறுமானத்திலிருந்து விடுபடச் செய்ய நடத்தைவாதிகள் மேற்கொள்ளும் முயற்சியினை பின்வந்த நடத்தைவாதிகள் கண்டிக்கின்றனர். இது பற்றி டேவிட் ஈஸ்டன் குறிப்பிடும் போது "பெறுமானங்களின் ஆக்கபூர்வமான வளர்ச்சி அரசியல் கல்வியின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும்"(Agarwal,1999)என்கிறார். டிவைட் வோல்டோ "அரசியல் விஞ்ஞானிகள் பெறுமானங்கள், நீதி, சுதந்திரம், அரசியல் செயற்பாட்டில் உள்ள சமத்துவம் பற்றிக் கருத்திற்கொள்ள வேண்டும்" (Agarwal,1999)என்கிறார்.

நடத்தைவாதமும் அதன் காரணகர்த்தாக்களும் சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வு என்பதிலும் பார்க்க நிகழ்கால சமூக நலன் சார்ந்த கற்கைத் துறையின் விஞ்ஞானத் தன்மை என்பதிலேயே கூடிய கவனம் செலுத்தினர். ஆனால் பின்வந்த நடத்தைவாதிகளும் அவர்களது போக்கும் சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வு பற்றியதாக

இருக்கின்றது. இதனை ஈஸ்டனின் வார்த்தையில் கூறுவதாயின் பின்வந்த நடத்தை வாதமானது எதிர்காலத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மேலும் நடத்தைவாதத்தின் பரப்பு குறுகியதாகும். அது தனிமனித மற்றும் குழுவின் அரசியல் நடத்தைகள் பற்றி மட்டுமே கவனம் செலுத்துகின்றது. இதனால் இங்கு அரசியல் நிறுவனங்கள் முக்கியத்துவம் இழக்கின்றன. ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது தனது ஆராய்ச்சியில் சமுதாய மாற்றத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதனால் அதனது பரப்பு விரிவானது.

நடத்தைவாதமானது அளவிற்கு அதிகமான பிற சமூகவியல் காரணிகளின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது. இதன் காரணமாக மெக்ஸ் வெபர் மற்றும் தோல்கொட் போர்சன் ஆகியோர் வலியுறுத்தும் சமூகவியல் அணுகுமுறை நடத்தைவாதத்தில் பின்தள்ளப்படுகின்றது. நடைமுறையில் நடத்தைவாதிகள் செய்முறை முன்னேற்றத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தினை விட அணுகுமுறை உருவாக்கத்தில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். உண்மையில் இது அரசியலில் ஒரு பகுதி மட்டுமே. ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது அணுகுமுறை உருவாக்கத்திலும் பார்க்க 'பொருத்தம் மற்றும் செயல்' என்ற தளத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நடத்தைவாதத்தில் அரசியல் நிறுவனங்கள் புறக்கணிக்கப்பட்டது போன்று அரசியல் மாற்றம், முரண்பாடு, வன்முறை போன்றவற்றைப் பற்றிய ஆய்வுகளும் பின்தள்ளப்பட்டுள்ளன. ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது ஆராய்ச்சியில் சமுதாய மாற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனக் கூறுகின்றது. இவ்விடயம் டேவிட் ஈஸ்டனின் 'பொருத்தமான நம்பிக்கைகள்' என்ற கோட்பாட்டிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நடத்தைவாத அணுகுமுறையானது ஆங்கில அமெரிக்க நாடுகளின் அரசியல் முறைகள் பற்றியே அதிக கவனம் செலுத்துகின்றது. அது வளர்ந்து வரும் மூன்றாம் உலகின் அரசியல் முறைமைகள் பற்றிய ஆய்விற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் முறைமைகள் பற்றியே கூடிய கவனம் செலுத்துகின்றது. இதன்படி டேவிட் ஈஸ்டனின் உள்ளீட்டு-வெளியீட்டுப் பகுப்பாய்வு முறை மற்றும் கப்ரியல் ஆமண்டின் கட்டமைப்புத் தொழிற்பாட்டு அணுகுமுறை ஆகியன பொது முறையமைவுக் கோட்பாட்டினடிப்படையில் மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் பற்றியே கவனம் செலுத்தின. குறிப்பாக கப்ரியல் ஆமண்டின் 'வளர்முக நாடுகளின் அரசியல்' என்ற நூல் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேற்குறிப்பிட்ட வேறுபாடுகள் தவிர்ந்த ஒரு நடத்தைவாதியாகவும் பின்வந்த நடத்தைவாதியாகவும் டேவிட் ஈஸ்டன் முன்வைத்த கருத்துக்களும் நடத்தைவாதத்திற்கும், பின்வந்த நடத்தைவாதத்திற்கும் இடையேயான வேறுபாட்டினை தெளிவாக அடையாளப்படுத்துகின்றன. அந்தவகையில் ஒரு நடத்தை வாதியாக டேவிட் ஈஸ்டன் நடத்தைவாதத்தின் முக்கிய பண்புகளாக ஒழுங்குபாடுகள், சரிபார்த்தல், நுட்பங்கள், எண்கணிதவாதம், பெறுமானங்கள், முறைமைப்படுத்தல், தூய விஞ்ஞானம் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய எட்டு பண்புகளை அடையாளப்படுத்தியுள்ளார்(Manivasagar,1996).

பின்நாட்களில் நடத்தைவாதத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்த டேவிட் ஈஸ்டன் 'பொருத்தமான நம்பிக்கைகள்' என்ற தனது கோட்பாட்டில் அரசியல் விஞ்ஞான ஆய்வில் ஆய்வுக் கருவிகளைவிட ஆய்வு நோக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல், சமூக மாற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்தல், உண்மை நிலைகளைக் கருத்திற்கொள்ளல், அரசியல் கல்வியோடு பிரிக்க முடியாதவகையில் இணைந்திருக்கும் தகவுகளுக்கு உரிய அங்கீகாரம் அளித்தல், சமுதாயப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், அறிவைச் செயன்முறைப்படுத்துதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்(Agarwal,1999).

மேலும் ஜொஹாரி(J.C.Johari)என்பவர் 'அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள்' என்ற தனது நூலில் பாரம்பரியவாதத்துடன் இணைந்தவகையில் நடத்தைவாதத்திற்கும் பின்வந்த நடத்தை வாதத்திற்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகளை பின்வறுமாறு அடையாளப்படுத்தியுள்ளார்:

1. பாரம்பரியவாதம் உண்மைகளுக்கும் பெறுமானங்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பினை வலியுறுத்துகின்றது. நடத்தைவாதமானது உண்மையினையும்(Fact)பெறுமானத்தினையும் (Value) தனித்தனியாகவேறுபடுத்துகின்றது. ஆனால் பின்வந்த நடத்தைவாதத்தில் செயற்பாட்டினையும் பொருத்தப்பாட்டினையும் பொறுத்து உண்மைகளும் பெறுமானங்களும் இணைக்கப்படுகின்றன.
2. பாரம்பரியவாதம் முன்வரைபுடைய மற்றும் விதியுணர் தன்மையுடையதாகும். நடத்தைவாதமானது

முன்வரைவற்றதும்(Non-prescriptive),பொருள்சார்ந்ததும் மற்றும் சோதனைக்கு உட்படுத்தத்தக்கதுமாகும்(Empirical). ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது மனிதப் பிரச்சினைகளை அடியொற்றியதாக(Humanistically Problem Oriented)உள்ளது.

3. பாரம்பரியவாதம் பண்புசார் (Quality) தன்மையுடையதாகும். நடத்தைவாதமானது அளவுசார் (Quantitative)தன்மையுடையதாகும். ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது அளவுசார் மற்றும் பண்புசார் (Quality and Quantitative)ஆகிய இரு தன்மைகளையும் கொண்டதாகும்.
4. பாரம்பரியவாதம் ஒழுங்கின்மைகள் மற்றும் ஒழுங்குகளைக் (Irregularities and Regularities) கருத்திற்கொள்கின்றது. நடத்தைவாதமானது ஒருமைப்பாடுகள்(Uniformities)மற்றும் ஒழுங்குகளுடன் தொடர்புபட்டதாகும். ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது ஒழுங்குபாடுகளையும் ஒழுங்குபாடின்மைகளையும்(Regularities and Irregularities) கருத்திற் கொள்கின்றது.
5. பாரம்பரியவாதம் ஐரோப்பிய நாடுகளையே (European Countries) பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. ஆனால் நடத்தைவாதம் ஆங்கில அமெரிக்க நாடுகளின்(Anglo-American Countries) மீதும் பின்வந்த நடத்தைவாதமானது மூன்றாம் உலக நாடுகள்(Third World Countries) மீதும் கவனத்தினைக் குவித்துள்ளன.

மேற்குறிப்பிட்ட தரவுகளின் அடிப்படையில் நடத்தைவாதம் பாரம்பரியவாதத்திற்கான மறுப்புரை இயக்கமாக எழுச்சியடைந்த அதேவேளை, பின்வந்த நடத்தைவாதமானது நடத்தைவாதத்தின் சீர்திருத்தப் பகுதியாகத் தோற்றம்பெற்றது எனலாம். இந்தவகையில் இவ்விரண்டு நடத்தைவாத மரபுகளும் அவற்றின் ஆய்வு முறையியல், உள்ளடக்கம், இலக்கு, நோக்கு என்பவற்றில் வேறுபட்டுச் செல்கின்றன. இதன்படி நடத்தைவாதம் அரசியல் கல்வியினை விஞ்ஞானக் கற்கையாக மாற்ற வேண்டும் என்ற அதீத ஆவலின் விளைவாக உருவானதாகும். ஆனால் பின்வந்த நடத்தைவாதமானது நடைமுறை யதார்த்தத்தினை உணர்ந்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட நடத்தைவாதத்தின் புதிய வளர்ச்சி நிலையாகும்.

7. நடத்தைவாதிகளின் பங்களிப்பு

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அரசியல் விஞ்ஞானத்தினை புரட்சிகரமானதொரு பாடமாக மாற்றிய பெருமை நடத்தைவாதத்தினையே சாரும். புதிய கோட்பாட்டு உருவாக்கம், புதிய ஆய்வு நுட்பங்களை அறிமுகம் செய்தமை தொடர்பில் இவ் இயக்கத்தின் பங்களிப்பு குறிப்பிடும்படியானது. அந்தவகையில் நடத்தைவாதம் அரசியல் விஞ்ஞானக் கல்விக்கு வழங்கிய பங்களிப்பினை பின்வரும் இரு தலைப்புக்களின் கீழ் நோக்கலாம் (Manivasagar,1996):

**I.** ஆய்வு முறையியல் **(Research Methodology)**

அரசியல் விஞ்ஞானத்தில் புதிய ஆய்வு முறையியலை உருவாக்குவதில் நடத்தைவாதிகள் ஒரு புரட்சிகர மாற்றத்தினை உண்டுபண்ணினர். இதன்படி அரசியல் விஞ்ஞான ஆய்வில் அதிகளவு பயன்படுத்தப்படும் ஆய்வு முறைகளான உள்ளடக்கப் பகுப்பாய்வு(Content Analysis), விடய ஆய்வு (Case Study),மாதிரி ஆய்வு(Samples Survey),அவதானம் (Observation),நேர்காணல் (Interview)போன்றன நடத்தைவாதத்தின் பங்களிப்பினூடாகத் தோற்றம் பெற்றவையாகும். அதேவேளை தர்க்கரீதியான அளவீட்டு முறை மற்றும் அளவீட்டு நுட்பம் பற்றிய வளர்ச்சியிலும் நடத்தைவாதிகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

**II.** கோட்பாட்டு உருவாக்கம்**(Theory Building)**

கோட்பாட்டு உருவாக்கம் தொடர்பில் நடத்தைவாதிகளின் பங்களிப்பு குறிப்பிடும்படியானதாக இல்லை. எனினும் நடத்தைவாதிகளுள் ஒரு பகுதியினர் எண்ணக்கரு சட்டகத்தினை(Conceptual Framework)தெளிவான முறையில் கட்டியயெழுப்பினர். இதனூடாக தனிப்பட்டவர்களதும் குழுக்களினதும் செயல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அதேவேளை நடத்தைவாதிகள் அரசியல் விஞ்ஞானத்தின் அபிவிருத்தியில் கோட்பாட்டின் பெறுமதி, விரிவாக்கம் என்பதனை விட நுட்பங்களுடைய பரப்பெல்லையினை நல்ல முறையில் கையாள்வதிலேயே கவனம்செலுத்தினர். இதுவே பாரம்பரியத் தன்மையிலிருந்த அரசியல் விஞ்ஞானத்திற்குப் புத்துயிர்ப்பைப் பெற்றுக் கொடுத்தது எனலாம்.

மேற்குறிப்பிட்ட இரு வகைப் பங்களிப்புக்களினூடாக நடத்தைவாதிகள் அரசியல் விஞ்ஞானக் கல்விக்கு வழங்கிய பங்களிப்புக்களை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

I. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் எழுச்சியடைந்த நடத்தைவாதிகள் அரசியல் கல்வியினை ஒரு முழுமையான விஞ்ஞானமாக மாற்ற முயற்சித்தனர். குறிப்பாக அமெரிக்கப் பல்கலைக்கழகங்களும் பேராசியர்களும்

அரசியல் கற்கையினை விஞ்ஞானமாக்கும் முயற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர்.

II. நடத்தைவாதிகள் புதிய சிந்தனை முறைகளையும் ஆய்வுக்கான விஞ்ஞான முறைகளையும் விருத்தி செய்தனர். குறிப்பாக மெய்யியல், உளவியல் துறைகளினூடாக நடத்தைவாதிகள் அரசியல் விஞ்ஞானத்தில் தமது செல்வாக்கினைச் செலுத்தினர். பிற்பட்ட

காலத்தில் இவர்களது ஆய்வு முறைகள் மிகத் தீவிர விமர்சனத்திற்குட்பட்டாலும் அவர்களின் புதிய கோட்பாட்டாக்கல் முயற்சிகள், மரபார்ந்த அரசியல் விஞ்ஞானத்தின் ஆய்வுப் போக்குகளை மாற்றியமைத்தமை போன்றவற்றினூடாக அவர்கள் அரசியல் கல்விக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளனர்.

III. அரசியல் (Politics)என்ற பதத்திற்கு புதிய வரைவிலக்கணத்தை வழங்கியதன் மூலம் நடத்தைவாதிகள் அரசியல் விஞ்ஞானத் துறையின் பாடப்பரப்பினை விரிவுபடுத்தியுள்ளனர்.

IV. அரசியல் விஞ்ஞானம் அடிப்படையில் ஒரு சமூக விஞ்ஞானமாக இருப்பதனால் அதனை ஒரு இயற்கை விஞ்ஞானமாக மாற்றமுடியாது. ஆனால் நடத்தைவாதிகள் அரசியல் விஞ்ஞானத்தில் மிகவும் யதார்த்தமான முடிவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக உழைத்ததன் மூலம் அதனை விஞ்ஞான ரீதியானதாக மாற்ற முயற்சித்தனர்.

V. நடத்தைவாதிகள் பெறுமானம் பற்றிய விடயத்திலிருந்து அரசியல் பற்றிய கற்கையினை விடுவித்திருக்கின்றனர். விசேடமாக பக்கச்சார்பான நிலையிலிருந்து அரசியல் விஞ்ஞானக் கல்வியினை விடுவிப்பதற்காக பெறுமானத்திலிருந்து விடுபட்ட(Value-Free)அரசியல் கற்கைக்கான தேடலை நோக்கி அவர்கள் தமது கவனத்தினை திருப்பியிருந்தனர்.

8. முடிவுரை

முடிவாகக் கூறும்போது அரசியல் விஞ்ஞானத்தின் மரபுரீதியான அணுகுமுறைகளின் குறைபாட்டினை நிவர்த்திப்பதற்காக எழுச்சியடைந்த நடத்தைவாதம் பின்நாட்களில் சவால்களுக்குட்பட்டது. அதன் விளைவாக பின்வந்த நடத்தைவாதம் தோற்றம்பெற்றது. பின்வந்த நடத்தைவாதம் அதன் ஆய்வுமுறை, நுட்பம், நோக்கு, எல்லை என்பவற்றில் நடத்தைவாதத்திலிருந்து பல வழிகளில் வேறுபட்டுச் செல்கின்ற அதேவேளை,

நடத்தைவாதத்தின் விமர்சனப் பகுதியாகவும் அது எழுச்சியடைந்தது. குறிப்பாக இவ்விரு நவீன ஆய்வு மரபுகளும் அரசியல் விஞ்ஞானப் பரப்பில் உருவான காலமாற்றங்களின் விளைவாக தோற்றம் பெற்றவையாகும். எனினும் நடத்தைவாதம் அரசியல் விஞ்ஞான கல்விக்கு வழங்கியுள்ள பங்களிப்பினை குறைத்து மதிப்பிட முடியாது.

## REFERENCE

1. Agarwal, R.C. (1999).*Political Theory (Principles of Political Science)*. New Delhi: S.Chand and Company Ltd.

2. Easton, David. (1965).*A System Analysis of Political Life.* New York: Valley.

3. Eulau, Heinz. (2011).*Behavioralism in Political Science.* New Brunswick, New Jersey: Transaction Publishers.

4. Heywood, Andrew. (1994).*Political Ideas and Concepts: An Introduction.* New Jersey: St. Martin Press.

5. Johari, J.C. (1989).*Principles of Modern Political Science*. New Delhi: Sterling Publishers Ltd.

6. Johari, J.C. (2002).*Comparative Political Theory*. New Delhi: Sterling Publishers Ltd.

7. Kapur, A.C. (1996).*Principles of Political Science*. New Delhi: S.Chand and Company Ltd.

8. Lasswell, H.D. (1948).*The Analysis of Political Behavior*. London: Routledge.

9. Mahajan, V.D. (2009).*Political Theory (Principles of Political Science).*New Delhi: S.Chand and Company Ltd.

10. Manivasagar, A.V. (1996).*Essence of Advanced Political Analysis.* Jaffna: Social Scientist Publication.

11. Rathod, P.B. (2004).*Modern Political Theory*. New Delhi: Commonwealth Publishers Ltd.

12. Runney, Austin. (1962).*Essays on the Behvioural Study of Politics.* United States of America: International Political Science Association.